**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>O.S. No. 75/2020</u>**

**<u>Date</u> : 06.08.2026**

**<u>நீ. ம..சா. 1 – ஆனந்த் அசோக்</u>**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**<u>முதல் விசாரணை</u>**

இவ்வழக்கின் இந்நீதிமன்றத்தால் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்டு வழக்கு பட்டிகை சொத்தினை பார்வையிட்டு நான் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை, வரைபடம் மற்றும் புகைப்படங்கள் எண்ணம் மற்றும் குறுந்தகடு முறையே நீ.ம.சா.ஆ 1, 2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

நான் மனுவின் பெயரில் வாதிகள் கேட்டுக்கொண்ட குறிப்புகள் மற்றும் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்துள்ள மெமோவின் அடிப்படையில் வழக்குப்பட்டிகை சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 1ல் பக்கம் 3ல் பிரதிவாதிகளால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளேன் அதில் ஒன்றாம் கேள்விக்கு எஃப் எம் பி ஸ்கெட்ச் அடிப்படையிலோ பாதி பிரதிவாதிகளின் ஆவணங்களின் அடிப்படையிலோ வழக்கு பட்டிகை சொத்தினை அளக்கவில்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 1ன் படி வழக்கு ஏ, பி பட்டிகை சொத்துக்கள் பிரதிவாதியின் சொத்துக்கள் தர்க்கப்பட்ட பாதை அனைத்தும் 534/18க்கு உட்பட்ட சர்வே எண்ணுக்குள் தான் வருகிறது என்றால் சரிதான்.

வழக்குப்பட்டிகை சொத்தினை ஆவணங்களின் அடிப்படையில் அளக்காததால் பிரதிவாதிகளின் சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றும் வாதிகளின் சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றும் என்னால் கூற இயலாது என்றால் சரிதான். வாதிகளால் குறிப்பிடப்பட்டுள்ள 10.11.1955 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி 12.07.1990 ஆம் ஆண்டில்

ஏற்படுத்தப்பட்ட உயிலின் படியோ நான் வழக்குப்பட்டிகை சொத்தினை பார்வையிடவோ அளக்கவோ இல்லை என்றால் சரிதான். 1955 ல் எழுதப்பட்ட பாகபத்ராமணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வண்டிப் பாதையை நான் பார்க்கவோ அளவிடவோ இல்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 2 வரைபடத்தில் தர்க்கப்பட்ட பாதைக்கு வடக்கும் தெற்கும் ஒன்றாம் பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். மேற்படி தர்க்கப்பட்ட பாதைக்கு வடக்கு பக்கம் உள்ள சொத்தினை நான் ஆவணத்தின் அடிப்படையில் அளக்கவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பில் மனுவில் கேட்கப்பட்ட இரண்டாம் கேள்விக்கு நான் அளந்ததாக குறிப்பிடப்படாமல் அப்பகுதியில் அடங்கியுள்ள விவரங்கள் குறித்து மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்திருந்த மாதிரி வரைபடத்தின் படியும் நான் வழக்குபட்டிகை சொத்தினை அளக்கவில்லை என்றால் சரிதான். 4 அடி வீதி 22 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் அது பிரதிவாதியின் ஆவணத்தில் உள்ள சொத்தா என்று கூற இயலாது என்றால் சரிதான்.

நான் வழக்குப்பட்டிகை சொத்தினை ஆவணத்தின் அடிப்படையில் அளக்காமல் ஆணையர் பணியை மீறி வழக்குப்பட்டிகை சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறுதலாக வழக்குப்பட்டிகை சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

வழக்கு பி பட்டிகை சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்று சர்வேயர் மூலமாக கண்டுபிடித்து அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து தான் எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களின் ஆவணத்தை என்னிடம் தராததால் தான் என்னால் ஆவணங்களின் அடிப்படையில் வழக்குப்பட்டிகை சொத்தினை அளக்க முடியவில்லை என்றால் இரண்டு தரப்பினர்களும் ஆவணங்களை தர முற்படவில்லை.

வழக்குரையில் உள்ள வழக்கு பி பட்டிகை சொத்தும் நீ.ம.சா.ஆ 2ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு பி பட்டிகை சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ 1ல் சர்வேயர் சர்வே எண்ணின் படி அளந்து ஆக்கிரமிப்பு குறித்து கண்டறிந்ததன் பெயரில் ஆக்கிரமிப்பு

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையில் ஆவணங்களின் அடிப்படையில் அளக்கவில்லை என்று மட்டும் தான் கூறினேன். வழக்கு பி பட்டிகை சொத்துக்கு வடக்கு மற்றும் தெற்கு பக்கம் 1-ம் பிரதிவாதியின் சொத்து இருப்பதாக நான் ஆவணங்களின் அடிப்படையில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதை நான் பார்க்கவில்லை என்று கூறியது தற்போது வாதி மற்றும் பிரதிவாதிகளால் பொது பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**